பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

# தேன்சிட்டு

THEN CHITTU ★ FORTNIGHTLY ★

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9 வகுப்புகளுக்கான மாதமிருமுறை இதழ்
- 01-15 நவம்பர் 2024
- சிட்டு 3 ★ இதழ் 47
- விலை : ரூ. 20/-
- சென்னை

- 01-15 NOVEMBER 2024
- Chittu 3 ★ Issue 47
- Price : Rs. 20/-
- Chennai

## எங்கள் மாமா நேரு

பாடலைப் படிக்க 16ஆம் பக்கம் வாங்க!

மாணவப் படைப்பாளிகள் 78 குழந்தைகள் தினச் சிறப்பிதழ்



ஓவியம் : ஆர். பரணிதரன்

தினமும் மதியம் வாசிப்பு நேரம் 1:00 மணி முதல் 1:20 மணி வரை

"நாங்களும் கதை எழுதினோம்" 07 | பறக்கலாம் வா! 15 | கிளி எனும் தோழி 20 →

குழந்தைகள் தினச் சிறப்பிதழ்

# கழுகும் சிறுவனும்

எனக்குப் பிடித்த கதை

**ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் விக்னேஷ். ஒருநாள், அவன் தன் பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தில் இருந்த அல்லிப் பூக்களைப் பறிக்கச் சென்றான்.**

குளத்தில் துள்ளிக் குதித்த மீன்களைக் கண்ட அவன், அவற்றைப் பிடிக்க நினைத்தான். உடனே, குளத்திற்குள் இறங்கினான். அங்கும் இங்கும் நீந்தினான். குளத்தில் இருந்த பாம்பு அவனைப் பார்த்தது. இவனால் தனக்கு ஆபத்து வருமோ என நினைத்தது. அவன் தன்னருகே வந்தால் கொத்துவதற்குக் காத்திருந்தது. அவன் பாம்பின் அருகே நீந்திச் சென்றான். பாம்பு தண்ணீரில் இருந்து தலையைத் தூக்கியது. குளக்கரையில் உள்ள மரத்தில் இருந்த கழுகு, பாம்பு வெளியே வருவதைப் பார்த்தது. சட்டென்று பறந்து வந்து பாம்பைக் கவ்விக்கொண்டு காட்டை நோக்கிப் பறந்தது. விக்னேஷ் மீன்களைப் பிடித்துக்கொண்டு, பூக்களையும் பறித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.





ஓவியம்: பா. செந்தில்குமார்



சி. விக்னேஷ்,
9ஆம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
திருநாகேஸ்வரம்,
தஞ்சாவூர்.

# ரோஜா பூ

எனக்குப் பிடித்த பாடல்



எம். ஏஞ்சல்,
8ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
ஆண்டாங்கோயில் கிழக்கு, கரூர்.

வண்ண வண்ண ரோஜா பூ
எனக்குப் பிடித்த ரோஜா பூ
அழகான ரோஜா பூ
கண்ணைப் பறிக்கும் ரோஜா பூ!

தோட்டத்தில் நானும் வளர்ப்பேனே
தலையில் சூடிக் கொள்வேனே
பூத்துப் பூத்துக் குலுங்குமே
பூவை நானும் பறிப்பேனே!


ரோஜா தோட்டம் கண்டாலே
மனதில் மகிழ்ச்சி அடைவேனே
வண்ண வண்ண ரோஜா பூ
எனக்குப் பிடித்த ரோஜாபூ!



ஓவியம்: பா. செந்தில்குமார்

## விடுகதைகள்

1. வட்ட வட்ட நிலவில்
   வரைஞ்சிருக்கு, எழுதியிருக்கு
   **அது என்ன?**
2. தலைக்குள் கண் வைத்திருப்பான்
   **அவன் யார்?**
5. உடம்பெல்லாம் தங்க நிறம்,
   தலையில் பச்சை நிறம்
   **அது என்ன?**





ந. பூர்ணிமா,
9ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
திருவள்ளுவர் நகர்.
இராஜபாளையம்,
விருதுநகர்.

விடைகள்: 1. நாணயம், 2. நுங்கு, 3. அன்னாசிப் பழம்.




**அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!**

# எங்க ஊர் யானை



**ஸ்ரீ. வீரசஞ்சீவி,**
8 ஆம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
வெள்ளூர், புதுக்கோட்டை.

யானை யானை
அழகர் யானை
அழகரும் சொக்கரும்
ஏறும் யானை
கொம்பு நீட்டி, வால் ஆட்டி,
காடும் மலையும்
சுற்றித் திரியும் யானை
தண்ணீர் அதிகம் குடித்து மகிழும்.
பெரிய காதுகள்
அசைக்கும் யானை
கட்டிக் கரும்பை
முறிக்கும் யானை
காவேரி ஆற்றைக்
கலக்கும் யானை
நண்பர்களோடு சேர்ந்து
விளையாடும் யானை
சேட்டைகள் செய்யும்
சின்ன யானை
குட்டி யானைக்கு
கொம்பு முளைத்ததாம்
பட்டணம் எல்லாம் பறந்து போனதாம்!




அட்டைப்பட ஓவியம்



**ஆர். பரணிதரன்,**
8ஆம் வகுப்பு,
அரசினர்
மேல்நிலைப் பள்ளி,
மேலப்புலம்,
ராணிப்பேட்டை.

**தேன்சிட்டு**
ThenChittu Fortnightly

- 01 – 15 நவம்பர் 2024
- சிட்டு 3 ★ இதழ் 47
- 01 – 15 NOVEMBER 2024
- Chittu 3 ★ Issue 47

***

பதிப்பாளர் / ஆசிரியர் :
**செ. அமுதவல்லி**

***

பொறுப்பாசிரியர் :
**யெஸ். பாலபாரதி**

***

இணையாசிரியர்கள்:
**விஷ்ணுபுரம் சரவணன், பொன். மூர்த்தி**

***

ஆசிரியர் குழு:
**இரா. அருண்பாண்டியன், வி. விஜயகுமார், து. மலர்விழி ஜூலியட்**

***

வடிவமைப்பாளர்கள்:
**எஸ். சீனிவாசராவ், பி. வன்மிகநாதன், பூ. சேஷாத்ரி**

***

அச்சிட்டோர் :
**பா. ராஜ்குமார்**

***

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in ❖ சந்தா குறித்த தகவல்களுக்கு : magazine.subscription@tnschools.gov.in

பதிப்பகம்: **தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.** ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண் 68, கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
அச்சகம் : **ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்,** 69-71/A சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம், அ.கு.எண் – 600 124.

# வாட்டர்பால்ஸ் கிழக்கு – வால்பாறை



மேற்குத் தொடர்ச்சி மலை பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா? அந்த மலையில்தான் வாட்டர்பால்ஸ் எனும் எங்கள் கிராமமும் உள்ளது. குறிஞ்சி, மருதம், நெய்தல், முல்லை, பாலை எனும் ஐவகை நிலங்களைப் பற்றிப் படித்துள்ளோம் இல்லையா? அவற்றில் ஒன்றான குறிஞ்சி நிலத்தில்தான் நாங்கள் வாழ்கிறோம்.

சமவெளிப் பகுதியில் இருந்து மலையில் ஏறும்போது 28 கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்தால்தான் இயற்கை அழகு மிக்க எங்கள் கிராமத்துக்கு வந்து சேரலாம். மழைக் காலங்களில் சிறியதும் பெரியதுமாகச் சில அருவிகள் எங்கள் பகுதியில் ஏற்படும். அதனால்தான் வாட்டர்பால்ஸ் என்று பெயர் வந்ததாகச் சிலர் கூறுகிறார்கள்.

எங்கள் கிராமத்தில் பூர்வீக மக்கள் என்று யாரும் இல்லை. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பிற மாநிலங்களில் இருந்தும் தேயிலை பறிக்கும் தொழிலுக்காகக் குடிபெயர்ந்து வந்தவர்களே இங்கு வாழ்கிறோம்.


இங்குள்ள பத்து எஸ்டேட்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. ஓராண்டில் ஆறு மாதங்கள் அதிக மழை பெய்யும். மூன்று மாதங்கள் நல்ல வெயில் அடிக்கும். மூன்று மாதங்கள் மூடுபனியாகக் காலநிலை இருக்கும். சுற்றுலாப் பயணிகளின் இளைப்பாறும் இடமாக இது இருக்கும். அதனால் சாலையோரத்தில் உள்ள சின்னச் சின்னக் கடைகளுக்கு வியாபாரம் நடக்கும்.

இங்கு முருகன் கோவில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். அதே போல கிறித்துவர்கள் விழாக்களும் உற்சாகமாக நடைபெறும்.



ஒருநாளில் ஒருமுறையேனும் தேநீர் குடித்தே தீர வேண்டும் எனப் பழகி விட்டவர்கள் கோடிக்கணக்கான மக்கள் இருப்பர். அவர்களின் நாவில் நல்ல ருசியைத் தரும் தேநீர் தூள் எங்கள் மண்ணிலிருந்து செல்கிறது என்பது எங்களுக்குப் பெருமை.

தூய்மையான காற்றும் காணும் இடங்களில் எல்லாம் பச்சைப்பசேல் எனும் இயற்கையும் உங்களுக்கு மிகவும் பிடிக்கும். நீங்களும் எங்கள் ஊருக்கு அவசியம் வாருங்கள். சுவைமிக்க தேநீரோடு காத்திருக்கிறேன்.



ஆ. நித்தீஸ்,
9 ஆம் வகுப்பு
அரசு உயர்நிலைப் பள்ளி,
வாட்டர்பால்ஸ் கிழக்கு,
வால்பாறை.

## விடுகதைகள்

1. இரவில் என் ஜொலி ஜொலிப்பில் வானம் கீழே வந்தது போல் உள்ளது. நான் யார்?
2. என் அருகில் ஓடி வந்தாய். உன்னிடம் உள்ள தண்ணீரை பருக நினைத்தேன் முடியவில்லை. நான் யார்?
4. சாப்பிடாமல் வளருவேன், கூராக ஏதேனும் பட்டால் கதறுவேன். நான் யார்?

விடைகள்:
1. சீரியல் பல்பு.
2. கடல்.
3. பலூன்.



எஸ். விஷாலினி,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
அளக்கரை,
நீலகிரி.

# சேர்ந்து போவோமா?



பட்டாம்பூச்சி பட்டாம்பூச்சி
எங்க போறீங்க?

படிக்கும் மாணவர் கூட்டத்தைப்
பார்க்கப் போறேங்க.



சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
எங்கே போறீங்க?

சிரிக்கும் மாணவர் கூட்டத்தைப்
பார்க்கப் போறேங்க.

பச்சைக்கிளியே பச்சைக்கிளியே
எங்கே போறீங்க?

பாடும் மாணவர் கூட்டத்தைப்
பார்க்கப் போறேங்க.

அன்னப்பறவையே அன்னப்பறவையே
எங்கே போறீங்க?



அன்பான மாணவர் கூட்டத்தைப்
பார்க்கப் போறேங்க.

பறவைகளே பறவைகளே
சேர்ந்து போவோமே



பண்பான மாணவர் கூட்டத்தைப்
பார்த்து வருவோமே!



ஓவியம்: பா. சௌந்தர்குமார்



செ. பூஜாஸ்ரீ,
6ஆம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மா. ஆலம்பட்டி,
சிவகங்கை.

எனக்குப் பிடித்த பாடல்

# இயற்கை



மண் செழிக்க செழிக்க விதை முளைக்கும்
விதை விழிக்க விழிக்க செடியாகும்
செடி வளர வளர இலைகள் துளிர்க்கும்
இலைகள் துளிர்த்து துளிர்த்துக் கிளைகளாகும்
கிளை கிளைக்க கிளைக்க மரமாகும்
மொட்டுகள் மெல்ல மெல்ல பூக்களாகும்
பூக்கள் குலுங்கக் குலுங்கக் காய்களாகும்
காய்கள் காய்க்கக் காய்க்கக் கனிகளாகும்
நாம் ருசிக்க ருசிக்க நல்லுணவாகும்
எத்தனை வளர்ச்சி; எத்தனை மகிழ்ச்சி
இயற்கையைப் போற்று என்றென்றும்
இயற்கையைப் போற்று!

ஓவியம்: பா. சௌந்தர்குமார்



பி. தனுஸ்ரீ,
7ஆம் வகுப்பு,
ரா.கி அரசு மேல்நிலைப் பள்ளி
பி.இராமச்சந்திரபுரம்,
விருதுநகர்.

எனக்குப் பிடித்த பாடல்

# தமிழ் மொழி




உலக மொழிகளில்
தமிழ்தான் அருமை
அதுவே எனக்குப் பெருமை
என் தாய்மொழி தமிழ்
உச்சத்தில் இருக்கிறது அதன் புகழ்
மிகமிகப் பழமையான மொழி தமிழ்
அதிஅதி அற்புதமான மொழி தமிழ்
முன்னோர் சொன்ன மொழி
அதுவே என் தமிழ் மரபு வழி!

எனக்குப் பிடித்த பாடல்



ம. அழகுஜோதி,
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கருப்பூர், திருப்பத்தூர்,
சிவகங்கை.



குழந்தைகள் தினச் சிறப்பிதழ்

# வீ. பூசாரிப்பட்டி






**எங்கள் ஊரின் பெயர் வீ. பூசாரிப்பட்டி. திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள சின்ன கிராமம். முழுப்பெயர் வீரப்பூர் பூசாரிப்பட்டி. எங்கள் ஊரில் முன்காலத்தில் போர் நடந்ததால் அதனால் வீரப்போர் பூசாரிப்பட்டி என்று அழைத்தார்களாம். பின்னாளில் பேச்சு வழக்கில் வீரப்பூர் பூசாரிப்பட்டி என்று மாறிவிட்டது என்று சொல்கிறார்கள்.**




எங்கள் ஊர் மக்களில் பெரும்பாலானோர் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் தொழில் செய்கிறார்கள். சிலர் சுமார் நூறு ஆடுகள் வரை வைத்து வளர்ப்பதையும் பார்க்கலாம். சிலர் மளிகைக் கடை, காய்கறிக் கடைகள் நடத்தி வருகிறார்கள்.

சிறுகீரை, மணத்தக்காளி, முருங்கை,





குப்பைமேனி, கொத்தமல்லி உள்ளிட்டவை எங்கள் ஊரில் விளைவிக்கப்படுகின்றன. அதேபோல உடலுக்கு நலம் தரும் கொய்யாப் பழம், பலாப்பழம், சீத்தாப்பழம் போன்ற பழங்களும் எங்கள் ஊரில் கிடைக்கின்றன. உணவில் ஆரோக்கியம் தரும் மூலிகைகளையும் உட்கொள்வது நல்லது. எங்கள் ஊரில் துளசி, கற்றாழை, கடுக்காய், வெற்றிலை, ஓமவல்லி, நீர்ப் பச்சை இலை உள்ளிட்ட மூலிகைச் செடிகள் அதிகம் கிடைக்கின்றன.

எங்கள் ஊரில் காட்டுப் பூனை, காட்டுநாய், செந்நாய், நரி, முள்ளம்பன்றி, கீரிப்பிள்ளை, முயல் போன்ற சிறு விலங்குகளைக் காணலாம். பறவைகளில் மயில், சிட்டுக்குருவி, காட்டுப்புறா, மரகதப் புறா, வல்லூறு, மீன் கொத்தி, மரங்கொத்தி, இரட்டை வாயன், கொண்டை வளர்த்தான் குருவி போன்றவையும் அடிக்கடி பறப்பதைக் காணலாம்.

எங்கள் ஊரில் இராணுவ வீரர்கள் பயிற்சி பெறுவதற்காகப் பீரங்கிமேடு என்கிற இடம் உள்ளது. ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை இராணுவ வீரர்கள் பயிற்சி பெற இங்கே வந்து செல்வார்கள். அதைப் பார்க்கும் எங்களுக்கு இராணுவ வீரர்கள் மீது மரியாதையும் பின்னாளில் நாமும் இராணுவத்தில் சேர்ந்து சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணமும் தோன்றும்.



எங்கள் ஊர் கோயிலின் திருவிழா பத்து நாள்கள் நடக்கும். சுற்றுவட்டாரப் பகுதிகளில் மிகவும் பிரபலமானது இதுதான். இன்னும் பல்வேறு சிறப்புகள் உள்ள எங்கள் ஊருக்கு நீங்கள் வருகை தாருங்கள்.



**ச. சண்முகப்பிரியா,**
8ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
வீ. பூசாரிப்பட்டி,
திருச்சி

## விடுகதைகள்

1. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகின்றான்.
2. தாடிக்காரன் மீசைக்காரன் கோவிலுக்கு போனால் வெள்ளைக்காரன்.

அவன் யார்



3. உயரத்திலிருந்து விழுவான் அடியே படாது தரைக்குத்தான் சேதமாகும்.

அது என்ன?



**ஈ. தனலட்சுமி,**
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ம.துரைச்சாமிபுரம்,
வெம்பக்கோட்டை ஒன்றியம்,
விருதுநகர்.

விடைகள்: 1. கடல் அலை, 2. தேங்காய், 3. அருவி நீர்

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

**மாணவர்களே!**
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?



பள்ளிக் கல்வித் துறையின் **மாணவர் உதவி எண்**

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

**14417**



# "நாங்களும் கதை எழுதினோம்"

நாங்கள், செங்கல்பட்டு மாவட்டம், அஸ்தினாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள். எங்களுக்குத் 'தேன்சிட்டு' இதழ் மிகவும் பிடிக்கும். அதில் வந்த கதைகள் எங்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தன. அவற்றை நாங்கள் மிகவும் விரும்பிப் படித்தோம். அதேபோல நாங்களும் எழுத வேண்டும் என்று விரும்பினோம். ஆசை இருந்தாலும் எப்படித் தொடங்க வேண்டும் என்று தெரியவில்லை.

எங்கள் பள்ளியில் 'ஒரு ஊர்ல...' கதை மன்றம் உள்ளது. அதன் சார்பாக ஒரு கதை எழுதும் பயிலரங்கம் நடைபெற்றது. அதன் வழி எங்கள் ஆசையும் நிறைவேறியது. இந்தக் கதை பயிலரங்கத்தை கும்பகோணம், அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவ எழுத்தாளர்கள் ஸ்ரீகாயத்ரி என்ற ஹரிணி அக்காவும் அன்புச்செல்வன் அண்ணாவும் நடத்தினார்கள்.



'தேன்சிட்டு' சிறார் இதழின் சில பக்கங்களை எடுத்து, அதில் இருந்த சில படங்களைக் காட்டி, இந்தப் படத்தை வைத்து ஒரு கதையை உருவாக்கும்படிக் கூறினர். எழுதலாம் என உட்கார்ந்தால் ஏகப்பட்ட சந்தேகங்கள் வந்தன. எங்களது சந்தேகங்களை அவ்வப்போது தீர்த்து வைத்தனர்.

படங்களை வைத்துக் கதை எழுதிய பின்னர், அனைவருக்கும் தலா ஒரு தலைப்பை அளித்து, அதற்கு ஏற்றாற்போல கதைகளை எழுதச் சொன்னார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு, நாங்கள் அடுத்த கதைகளை எழுதினோம்.

நோட்டில் அனைத்துக் கதைகளையும் எழுதியதும் குரல் ஒலிப்பதிவின் வழி தட்டச்சு செய்தோம். சுமார் 40 கதைகள் கிடைத்தன. பயிற்சி நடத்தியவர்களுடன் இணைந்து எங்கள் பள்ளிக்கூடத்தில் பத்தாவது படித்துக் கொண்டிருக்கும் அக்காக்கள் பிரவீனாவும் திவ்யஸ்ரீயும் எல்லாக் கதைகளையும் தொகுத்து, தனிப் புத்தகமாக உருவாக்கினார்கள்.

அதற்கு 'ஒரு ஊர்ல!' என்று தலைப்பிட்டோம். அரசுப் பள்ளி மாணவர்கள் ஆகிய நாங்கள் எழுதிய கதைப் புத்தகம் இந்த ஆண்டின் ஆசிரியர் தினத்தில் தமிழ்க்கூடல் நிகழ்வில் வெளியிடப்பட்டது. எங்கள் அனைவரின் கனவும் நனவானது. எங்கள் நூலைப் பார்த்த மற்ற வகுப்பு மாணவர்களும் இப்போது கதைகளை எழுதி வருகின்றனர்.




ஒரு ஊர்ல

அரசுப் பள்ளி மாணவர்களின் கதைகள் படிக்க...

இந்த நூலை இலவசமாகப் படிக்க இந்த QR கோடை சொடுக்கவும்.



ரு. தேவிஸ்ரீ,


9ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி
அஸ்தினாபுரம்,
காட்டாங்கொளத்தூர்
ஒன்றியம், செங்கல்பட்டு.



இ. சந்தோஷ்,

9ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
அஸ்தினாபுரம்,
காட்டாங்கொளத்தூர்
ஒன்றியம், செங்கல்பட்டு.

## கண் விடுகதைகள்



1. எனக்கு ஒற்றைக் கண் உள்ளது ஆனால் என்னால் பார்க்க முடியாது நான் யார்?
2. எனக்கு ஆறுமுகங்கள் 21 கண்கள் உள்ளன ஆனால் என்னால் பார்க்கவே முடியாது நான் யார்?
3. என் கண்களில் உன் விரல்களை வைத்தால் நான் என் வாயைத் திறக்கிறேன் நான் யார்?

விடைகள்: 1. ஊசி. 2. பகடை. 3. கத்தரிக்கோல்



நா. அமோகா,

8 ஆம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
கருப்பூர், திருப்பத்தூர்
வட்டாரம், சிவகங்கை.



## சைல்டு லைன் 1098


(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)


- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்




# பெயர்களை நிரப்புக

படங்களைப் பார்த்து அறிவியல் விஞ்ஞானிகளின் பெயர்களை இங்குள்ள கட்டங்களில் ஆங்கிலத்தில் நிரப்புங்கள்.







**மு. பார்த்தசாரதி,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பள்ளப்பட்டி,
தருமபுரி.

Answers: 1. Faraday, 2. C.V.Raman, 3. Galileo, 4. Marconi, 5. Abdul kalam

# மழைக் கால கீதம்




கட்டுமரத்துல சிட்டுக்குருவி
கொட்டி முழங்குது பாரு
பக்கம் வந்த தென்றல்பட்டு சிறகினைத்
தொட்டுச் சிலிர்க்குது பாரு
கொட்டும் மழையினில் கூட்டைக்
கலைக்குது கூடிவரும் காத்து
நட்டப் பயிரெல்லாம் நாணிச் சிரிக்கிது
மழைக் கால கீதம் கேட்டு
பூமி குளிர்ந்தது பூவாய் மலர்ந்தது
பொன்னி நதிப் பெருக்கு
வயல் நிறைந்தது பயிர் விளைந்தது
பஞ்சம் இல்லை நமக்கு!



**மா. ஹாசினி,**
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி, நச்சினார்குடி,
மயிலாடுதுறை.

# நீரைப் போற்றுகிறேன்



காடு வளத்தைப் போற்றுகிறேன்
நிலச்சரிவே போ போ போ!
நில வளத்தைப் போற்றுகிறேன்
நிலநடுக்கமே போ போ போ!
நீர் வளத்தைப் போற்றுகிறேன்
வெள்ளப்பெருக்கே போ போ போ!
மரங்களை வளர்த்துப் போற்றுகிறேன்
வறட்சி நிலையே போ போ போ!
இயற்கைப் பொழிவைப் போற்றுகிறேன்
இயற்கை அழிவே போ போ போ!

ஓவியம் : பா. செந்தில்குமார்



ர. ரித்தேவ் வர்மன்,
7ஆம் வகுப்பு,
நகராட்சி நடுநிலைப் பள்ளி
சந்தைப்பேட்டை,
புதுக்கோட்டை.

எனக்குப் பிடித்த பாடல்

## மீன் பிடிக்கலாம்

காட்டுக்குப் போகலாம்
காட்டு யானை பிடிக்கலாம்
ஆத்துக்குப் போகலாம்
ஆத்து மீன் பிடிக்கலாம்
கடலுக்குப் போகலாம்
கடல் மீன் பிடிக்கலாம்
மலைக்குப் போகலாம்
மலை ஆடு பிடிக்கலாம்
பள்ளிக்கூடம் போகலாம்
நல்ல பாடல் படிக்கலாம்!



ஓவியம் : பா. செந்தில்குமார்



கா. ராகுல்,
9ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருப்புறம்பியம்,
தஞ்சாவூர்.

## கட்டலாமா? சிரிக்கலாமா?

மாவிலையில் தோரணம்
கட்டலாமா?
வாழையிலையில் சோறு
உண்ணலாமா?
பனையோலையில் கூடை
பின்னலாமா?
பூவைக் கொய்து மாலை
கட்டலாமா?
பாண்டி விளையாட்டு
விளையாடலாமா?
ஓட்டப் பந்தயம் நாமும்
வைக்கலாமா?
போட்டியில் ஓடி நாமும்
ஜெயிக்கலாமா?
எல்லாரும் சிரித்து மகிழலாமா?



சு. வர்ஷிகா,
8ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
அதங்கோடு,
கன்னியாகுமரி.




# ஆலமரம்



வெயில் அடிக்கும் நேரத்திலே
நிழல் கொடுப்பது யாரு?

அது ஆலமரம் தானே!
அது ஆலமரம் தானே!

விலங்குகளுக்கு வீடு தந்து
உதவுவது யாரு? உதவுவது யாரு?

அது ஆலமரம் தானே!
அது ஆலமரம் தானே!

பீப்பி செஞ்சு ஊதிடவே
இலை கொடுத்தது யாரு?

அது ஆலமரம் தானே!
அது ஆலமரம் தானே!

நான் தொங்கி விளையாட
விழுது கொடுத்தது யாரு?
விழுது கொடுத்தது யாரு?

அது ஆலமரம் தானே!
அது ஆலமரம் தானே!



பூ. காவியா,
7ஆம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி, நெடுமறம்,
திருப்பத்தூர் ஒன்றியம்,
சிவகங்கை.

எனக்குப் பிடித்த பாடல்

# ஓ... ஓ... மயிலே...

உதித்திடும் சூரியனே, பளபளவென்று
மின்னும் வெளிச்சம் தந்திடுவாயே!

ஓ... ஓ... குயிலே, பூத்துக் குலுங்கும்
மரங்களில் கூடுகட்டிக் கூவிடுவாயே!

ஓ... ஓ... மயிலே மழை பொழியும்போது
தோகையை விரித்து ஆடுவாயே!

ஓ... ஓ... சுட்டிக் குழந்தையே,
மழலை மொழியால் மகிழ்விப்பாயே!

ஓ... ஓ... ஒளி வீசும் வெண்ணிலாவே,
குளிர்ச்சியான ஒளி வீசிடுவாயே!





சு. ஜெபிஷா,
7ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
உண்ணாமலைக்கடை,
கன்னியாகுமரி.

ஓவியங்கள் : பா. செந்தில்குமார்

# கல்விச் சொத்து

கல்வி எனும் வித்து
அழிக்க முடியாத சொத்து
அள்ள முடியாத முத்து
அள்ள அள்ள குறையாதது
என்றென்றும் திகட்டாதது
நீ அந்த அறிவின் ஊற்றோ!
கடலின் ஆழமோ!
கருமேகத்தின் மழையோ!
இமயத்தின் உயரமோ!
வானத்தின் நீளமோ!
உன்னை நினைக்கும் போது
மனதில் ஊற்று எடுப்பது கூட
உன்னைப் பருகியதாலோ!
கல்வி எனும் வித்து
அழிக்க முடியாத சொத்து






வ. தனுஸ்ரீ,
7ஆம் வகுப்பு, பா.சு.அரசு
மேல்நிலைப் பள்ளி,
கெம்பநாயக்கன் பாளையம்,
ஈரோடு.



# மாணவர் கலைவண்ணம்



**து. வாணிஸ்ரீ,**
9ஆம் வகுப்பு, புகழேந்தி புலவர் அரசு மேல்நிலைப் பள்ளி, பொன் விளைந்த களத்தூர், செங்கல்பட்டு.



**யு. பூவிதா,**
8ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, செல்லப்பம்பாளையம், கோயம்புத்தூர்.



**அ. சஹானா பானு,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மூட்டக்காம்பட்டி, கரூர்.



**க. ஹரிணிபிரியா,**
9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, உட்கோட்டை, அரியலூர்.



**வெ. ஹரிஷ்,**
7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, அதையூர், கள்ளக்குறிச்சி.




**த. சுதர்சன்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கடலங்குடி, மயிலாடுதுறை.



**ச. சங்க இலக்கியன்,**
6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொக்கராப்பட்டி, தருமபுரி.



**ஆர். விக்னேஷ்குமார்,**
7ஆம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வடமதுரை, திண்டுக்கல்.



**கி. கமலேஷ்,**
8ஆம் வகுப்பு, சேக்கிழார் அ[illegible] ஆண்கள் மேல்நிலைப் பள்[illegible] குன்றத்தூர், காஞ்சிபுரம்.

# மாணவர்






**இரா. மோகன்,**
8ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, இலாடனேந்தல், சிவகங்கை.




**எம் . சசிகலா,**
8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மாம்பாக்கம், ராணிப்பேட்டை.




**பி. ஹரினிகா,**
8ஆம் வகுப்பு, இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை.



**த. தருண் பாண்டி,**
8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, லட்சுமிபுரம், தேனி.



**வி. விசாலினி,**
6ஆம் வகுப்பு, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.



**ரா. ரோசியா,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முகிழ்த்தகம், இராமநாதபுரம்.



**மு. சுதா,**
7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வில்லிசேரி, தூத்துக்குடி.



**தே. ஜெய்ஸ்ரீ,**
9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, திருக்கண்டலம், திருவள்ளூர்.



**க. கிஷோர் ஜெயராஜ்,**
7ஆம் வகுப்பு, அரசு உயர் நிலைப் பள்ளி, திட்டச்சேரி, நாகப்பட்டினம்.



**எஸ். சிவபால பிரபா,**
9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, மாதம்பிள்ளைதர்மம், திருநெல்வேலி.


# ் கலைவண்ணம்





**ந. பிரதாப்,**
7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சிறுகுடல், பெரம்பலூர்.





**பி. சுஜித்,**
6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மேலராதாநல்லூர், திருவாரூர்.




**எம். இராஜேஷ்,**
8ஆம் வகுப்பு, சேத்தூர் சேவுக பாண்டிய அரசு மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம், விருதுநகர்.




**எஸ். ரக்ஷிதா,**
9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மதகொண்டப் பள்ளி, கிருஷ்ணகிரி.





**கோ. திரு,**
9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சிக்கணாங்குப்பம், திருப்பத்தூர்.




**ம. ஆகாஷ்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பழங்காமூர், திருவண்ணாமலை.

**எஸ். விஷ்வா,**
9ஆம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மங்கலம்பேட்டை, கடலூர்.




**தா. ரித்திகா,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சக்கராபுரம், விழுப்புரம்




**என். கீர்த்திகா,**
8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீமதுரை, நீலகிரி.

**வி. தனிஷ்கா,**
6ஆம் வகுப்பு, சென்னை நடுநிலைப் பள்ளி, பிரகாசம் சாலை, சென்னை.







# மாணவர் கலைவண்ணம்



**எஃப். ஷாதிஹா,**
7ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
செதுவாலை,
வேலூர்








**கே.கே. இனியன் குமார்,**
8ஆம் வகுப்பு, அரசு
பள்ளி,
பட்டிமணியக்காரன்,
ஈரோடு.

**வெ. கோபிகா,**
9ஆம் வகுப்பு, அரசு
உயர்நிலைப் பள்ளி,
பூலுவபட்டி,
திருப்பூர்.



**ஸ்ரீ. நவீன்,**
8ஆம் வகுப்பு,
மாநகராட்சி நடுநிலைப்
பள்ளி, இராமநாதபுரம்
ஏ.ஆர்.லைன்,
மதுரை.






**வி. வினிஷா,**
8ஆம் வகுப்பு, அரசு
நடுநிலைப் பள்ளி,
கடமாங்குழி,
கன்னியாகுமரி.



**எம். முஸ்கான்,**
8ஆம் வகுப்பு, அரசு
மகளிர் மேல்நிலைப்
பள்ளி, சங்ககிரி (வ),
சேலம்.





**ச. கிரிதரன்,**
8ஆம் வகுப்பு, அரசு
மேல்நிலைப் பள்ளி,
வளையப்பட்டி,
நாமக்கல்.






**ஜெ. ஜெனிட்டா,**
9ஆம் வகுப்பு, அரசு
மேல்நிலைப் பள்ளி
புல்லுக்காட்டுவலசை,
தென்காசி.





**ரா. லோகமித்ரா,**
9ஆம் வகுப்பு, அரசு
மேல் நிலைப் பள்ளி,
புள்ளம்பாடி,
திருச்சி.



படைப்புகளை அனுப்பும் மாணவர்கள்
தங்களின் புகைப்படம், பெயர், வகுப்பு,
பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண்,
மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும்
மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',
**'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

# பறக்கலாம் வா!

**இன்று என் வாழ்வில் மறக்க முடியாத நாள். இஸ்ரோ எனக்கு அளித்த விண்வெளி உடையை அணிந்திருந்தேன். அதில் நம் பெருமைக்கு உரிய தேசியக் கொடி பதிக்கப்பட்டு கம்பீரமாக இருந்தது.**

இதோ, எங்கள் தாய்த்திரு நாட்டில் தயாரிக்கப்பட்ட விண்வெளி ஓடத்தில் நான் பறக்கும் நேரம் நெருங்கிவிட்டது. என் பெற்றோர், நண்பர்கள், உறவினர்கள் எல்லோரின் வாழ்த்துகளோடும் பறக்கக் காத்திருந்தேன்.

கவுண்டவுன் தொடங்கிவிட்டது. மூன்று, இரண்டு, ஒன்று, ஜீரோ.....

செந்நிற அக்கினியைக் கக்கிக்கொண்டு, எங்களின் விண்வெளி ஓடம் விர்ரென்று விண்ணை நோக்கிப் பறந்துகொண்டிருக்கிறது.

உலகளவில் நம் தேசத்தைப் பெருமைப்படுத்தும் அற்புதப் பணியில் நானும் இருக்கிறேன். என் பங்களிப்பும் இருக்கிறது. அந்த எண்ணமே என்னை மேலும் உற்சாகப் படுத்தியது.

எங்குப் பார்த்தாலும் கருமை நிறம்... திடீரென்று என் மீது மழைத் துளிகள் விழுந்தன. விண்வெளியில் எப்படி வந்தது மழை என்று திகைத்தேன்.


"விக்னேஷ்... விக்னேஷ்.... எத்தனை தடவைதான் உன்னை எழுப்பறது... ஸ்கூலுக்கு நேரமாச்சுப் பாரு" சத்தம் கேட்டு கண்களைத் திறந்தேன். அம்மா, ஒரு செம்பில் தண்ணீரோடு நின்றுகொண்டிருந்தார்.

ஓ! இதெல்லாம் கனவா?

நேற்று சமூக அறிவியல் ஆசிரியர், சுனிதா வில்லியமும் வில்ஸ் மோரும் ஏழு நாள்கள் ஆய்வு செய்வதற்காக விண்வெளிக்குச் சென்றனர். சில சூழ்நிலைகளின் காரணமாக ஏழு மாதங்கள் கழித்துதான் திரும்பி வருவார்கள் என்று விளக்கமாகக் கூறினார். நேற்றிரவு படுக்கும்போது அதையே நினைத்துக்கொண்டிருந்தேன். அதுதான் கனவில் நானே விண்வெளிக்குப் புறப்பட்டு விட்டேன்.

அவசரம் அவசரமாகப் பள்ளிக்குப் புறப்பட்டேன்.

"அம்மா, நான் விண்வெளி வீரராக என்ன செய்யணும்?" என்று மாலையில் கேட்டேன். என் கேள்வியை ஆச்சரியத்துடன் கேட்ட அம்மா, "நீ முதல்ல சத்தான காய்கறிகளைச் சாப்பிட்டு, உன் உடலை வலிமையாக வைத்துக்கொள். பன்னிரண்டாம் வகுப்பு முடித்து அதற்கான துறையைத் தேர்வு செய்து படிக்கலாம்" என்றவாறே உணவைத் தந்தார்.



ஓவியம் : பா. செந்தில்குமார்

எனக்குப் பிடித்த கதை



ச. தக்ஷினேஸ்,
7ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ராயனூர்,
கரூர்.

## பயம் வேண்டாம்



**பல வண்ணங்கள்**
**தீட்டிய ஓவியமே**
**அழகாய் பறந்து**
**ஒளிரும் வைரமே**
**நெஞ்சில் இடம்பிடித்த**
**வண்ணமயமான நிழலே**
**சிறகடித்துக் கண்களைக்**
**குளிர வைப்பவனே**
**சிரிக்கும் பூக்களின்**
**அழகைக் கொண்டவனே**
**பட்டாம்பூச்சி எனும்**
**பெயர் பெற்றவனே**
**பக்கத்தில் வந்தால்**
**பயந்து ஓடுகிறாயே**
**பயம் வேண்டாம்...**
**நானும் உன் நண்பனே!**





வி.வை. விஜிஷ்,
7ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
கீழ்குளம்
கன்னியாகுமரி.

## விடுகதைகள்

1. எனக்கு இறக்கைகள் இல்லை. ஆனால் பறக்க முடியும்.
நான் யார்?
2. உங்களுக்கு வழி காட்டுவேன். ஆனால் நான் எங்கும் செல்ல மாட்டேன்.
நான் யார்?
3. ஒல்லி உடம்புக்குள் ஆயிரம் கதை இருக்கு.
அது என்ன?

விடைகள்: 1. புகை. 2. விளக்கு. 3. புத்தகம்



பா. நித்திஷ்,
8ஆம் வகுப்பு,
சென்னை நடுநிலைப் பள்ளி,
முட்டைக்காரன் சாவடி
சென்னை.

# அழகான குளம்

அந்தக் கிராமம் மிகவும் அழகானது. குளங்களும் ஆறுகளும் நூலகமும் பள்ளிக் கூடங்களும் அங்கு உள்ளன. மணிகண்டன் அங்குள்ள பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கிறான்.

மணிகண்டன் தன் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் குளம் ஒன்று இருந்தது. நிறைய பூக்கள் பூத்து அழகாக இருக்கும் அந்தக் குளம். அதன் அழகை அவன் இரசிப்பான். ஆனால், கடந்த சில நாள்களாக அதில் பலரும் குப்பைகளைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.

ஓரிரு மாதங்கள் கழித்துப் பார்த்தால் குளத்தைக் காணோம் குப்பைகள் சூழ்ந்துவிட்டன. மணிகண்டன் அதைப் பார்த்து தினந்தோறும் கவலைப்பட்டான்.

ஊரில் உள்ள சிலரிடமும் இந்தப் ... பற்றிச் சொன்னான். ஒருவரும் காதில் வாங்கவே இல்லை.

எப்படியாவது குளத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் என முடிவெடுத்தான். அதனால், ... மணிநேரம் அதற்கு என ஒதுக்கினான். குப்பைகளை எடுத்துப் பெரிய பையில் போடுவான். அதைச் சிரமப்பட்டுத் தூக்கிச் சென்று ஊரின் மையத்தில் உள்ள குப்பைத் தொட்டியில் போடுவான்.



ஓவியம் : பா. செந்தில்குமார்

அவனுடன் படிக்கும் மாணவர்கள் "எப்படிடா இப்படி உழைக்கிறாய்?" எனக் கேட்டனர்.

அவன் புன்னகை செய்து, "இந்தக் குளம் நம் கிராமத்தின் உயிர். அதைச் சுத்தமாக வைத்தால், நம்முடைய கிராமம் அழகாக இருக்கும்," என்றான். உடனே அவர்களும் ... தங்களை இணைத்துக் கொண்டனர்.


மணிகண்டன் மற்றும் அவனது நண்பர்களின் உழைப்பையும், விருப்பத்தையும் பார்த்த கிராம மக்கள் தாங்களும் சேர்ந்து குளத்தைச் சுத்தப்படுத்தினர். அடுத்த நாள் முதல் யாரும் அங்குக் குப்பைகளைக் கொட்டவில்லை. ஒரே வாரத்தில் குளம் மீண்டும் அழகாக மாறி விட்டது.



**க. நிஷாந்தினி,**
8ஆம் வகுப்பு,
சென்னை நடுநிலைப் பள்ளி,
மூட்டைக்காரன் சாவடி, சென்னை.

எனக்குப் பிடித்த கதை

# எங்கள் மாமா நேரு



உலக வரலாற்றைப் படித்தவரே - உலகில்
வரலாறு படைத்தவரே!
நாட்டின் முதல் பிரதமராய் வீற்றிருந்தவரே
நானிலம் போற்றும்படி வீரநடை போட்டவரே!
மக்கள் மனங்களில் நின்றவரே!
செல்வச் செழிப்பில் பிறந்தாலும்
ஏழைகளின் மனதை வென்றவரே!
குழந்தைகள் கொண்டாடும் மாமா - எங்கள்
உள்ளங்கவர் நேரு மாமாவே!



**ப. லக்ஷகி,**
6ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி
த.பாதர்பேட்டை,
திருச்சி.

எனக்குப் பிடித்த பாடல்

# பறக்கும் சதுரங்கம்

மலர்விழி மகிழ்ச்சியோடு வீட்டுக்கு வந்தாள். அவள் அந்த ஊரில் உள்ள பள்ளியில் ஆறாம் வகுப்புப் படிக்கிறாள். சதுரங்கம் விளையாடுவது என்றால் அவளுக்கு நேரம் போவதே தெரியாது. இப்போதுகூட சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று சான்றிதழும் சிறப்பான சதுரங்க அட்டையோடும் வீட்டுக்கு வந்திருக்கிறாள்.

தனக்குப் பரிசாகக் கிடைத்த சதுரங்கத்தை அனைவரிடமும் காட்டி மகிழ்ந்தாள். அவர்களும் அவளைப் பாராட்டினர். படுக்கும்போதும் தன்னோடு வைத்துக்கொண்டாள். அப்படியே உறங்கிவிட்டாள்.

சிறிது நேரத்தில் திடீரென்று வெளிச்சம் வீச, அவளின் கண்கள் கூசின. கண் விழித்த அவள், சதுரங்க அட்டைக்குள் இருந்து வெளிச்சம் வருவதைக் கண்டாள். பயத்தோடு அதைத் திறந்தாள். அதில் இருந்த ராஜாவும், ராணியும் உருவம் எடுத்து அவளோடு பேசின.

"உன் ஊருக்குப் புதிதாக வந்துள்ளோம். ஊரைச் சுற்றிக் காட்ட மாட்டாயா?" என அவை கேட்டன.

எப்படி அழைத்துச் செல்வது என யோசித்தபோது, சதுரங்க அட்டை பெரிதாக மாறியது. அதில் ஏறச் சொன்னது. அவள் ஏறியதும், அழகாகப் பறந்தது. ஊரில் உள்ள விளையாட்டு மைதானம், நூலகம், ஆறு, குளம் உள்ளிட்டவற்றைச் சுற்றிக் காட்டினாள். ஊரைப் பற்றிய நிறைய கதைகள் சொன்னாள். திரும்பவும் வீட்டுக்கு வந்தனர். அவள் கீழே இறங்கியதும் சதுரங்க அட்டை மீண்டும் சிறியதாகி விட்டது.

அன்று முதல் அவர்கள் தினமும் வந்து எங்கேனும் சென்று சுற்றிப் பார்ப்பதை வழக்கமாக்கி விட்டார்கள். அவற்றைத் தன் நண்பர்களிடம் கூறி மகிழ்ந்தாள்.








மா. சபரிகண்டன்,
7ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
திருப்புவனம் வடக்கு,
சிவகங்கை.

## இரட்டுற மொழிதல்

1. கை தட்டுவது எப்போது? ஆவணி தொடங்குவது எப்போது? – 
2. பாயசம் மணப்பது இதனால், பொருள்களை விற்பது இதனால். – 
3. நண்பர்கள் - எடுத்தால் நகைத்துக் கொண்டு நிற்போம், நாகம் - எடுத்தால் விரைந்தோடிப் போவோம். – 
4. எருக்கன் இலை பழுப்பதேன்? எருமைக்கன்று அழுவதேன்? – 
5. நங்கை விரும்பி அணியும் அணி, நண்டு வாழும் குழி. – 
6. பருப்பு சாம்பார் மணப்பதேன்? படை வீரர்கள் வீழ்வதேன்? – 





பெரி. சௌமியா,
8ஆம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கருப்பூர்,
சிவகங்கை

விடைகள்:
1. ஆடி பிறந்தால்,
2. ஏலம் போடுவதால்,
3. படம் எடுத்தால்,
4. பால் வற்றிப்போனால்,
5. வளை,
6. பெருங்காயத்தால்.

# மூன்று பூனைகள்

மாணவி பா. சாதனாபாரதி எழுதிய கதையைப் படக் கதையாக மாற்றியுள்ளோம்

ஓவியங்கள்: பா. செந்தில்குமார்





7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வாலிகண்டபுரம், பெரம்பலூர்.






('மூன்று பூனைகளின் நிறங்கள்' எனும் மாணவர் சிறுகதைத் தொகுதியிலிருந்து...)

# கிளி எனும் தோழி

மாயா பள்ளி விட்டு வீட்டுக்கு வரும்போது கிளியின் சத்தம் கேட்டுத் திரும்பினாள். அங்கே மரத்தின் கீழே கிளி ஒன்று காயம்பட்டுக் கிடந்தது. பலரும் அங்கே சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், எல்லோரும் அதைப் பார்த்தும் பார்க்காததுபோலச் சென்றுவிட்டார்கள்.

மாயா ஓடிச் சென்று கிளியைத் தூக்கினாள். பத்திரமாக வீட்டுக்கு எடுத்துச் சென்றாள். அம்மாவிடம் காட்டி, நடந்ததைச் சொன்னாள். அம்மா தந்த மருந்தை கிளியின் காயத்தின் மேல் பரிவோடு தடவினாள். சின்னக் கரண்டியை வைத்து நீர் கொடுத்தாள்.



வீட்டில் எல்லோருமே கிளியைப் பாசமாகப் பார்த்துக்கொண்டார்கள். அப்பா அடிக்கடி "கிளிக்குச் சாப்பிட ஏதாவது கொடுத்தியா?" என்று கேட்டுக்கொண்டே இருந்தார். தக்காளி, மிளகாய்ப் பழம் போன்றவற்றை வாங்கி வந்து தந்தார். மாயா அவற்றை ஆசையோடு கிளிக்குத் தந்தாள். கிளிக்கு ஏதேனும் பெயர் வைக்கலாமே என்று நினைத்தாள். மிகவும் யோசித்து 'மீனாட்சி' என்று வைத்தாள். கிளியும் மாயாவோடு ஒட்டிக்கொண்டது.

சில நாள்களில் கிளியின் காயங்கள் எல்லாம் ஆறிவிட்டன. கிளியைக் கொண்டு போய் காட்டில் விட்டு வந்தாள் மாயா. வீட்டுக்கு வந்தவளிடம் "கிளியைக் காட்டில் விட்டுத்தானே சென்றாய்?" என்று கேட்டார் அம்மா.

"ஆமா அம்மா. அங்கேதானே அது சுதந்திரமாய் இருக்கும்" என்று பதில் சொன்னாள் மாயா. "அதுதான் சரி" என்று அம்மாவும் அப்பாவும் சொன்னார்கள்.

அடுத்த நாளே அந்தக் கிளி, மாயாவின் வீட்டுக்கு வந்தது. சிறிது நேரம் அவளோடு விளையாடியது. பிறகு காட்டுக்குச் சென்றுவிட்டது. கிளி வருவதும் விளையாடுவதும் தினசரி வழக்கமாகி விட்டது. மாயாவின் இன்னொரு தோழியாக அந்தக் கிளி மாறிவிட்டது.

ஓவியம் : பா. வெங்கடேஷ்குமார்

எனக்குப் பிடித்த கதை

க. முனீஸ்வரி,
9ஆம் வகுப்பு, நகர மன்ற திரு.வி.க. மேல்நிலைப் பள்ளி,
ஸ்ரீவில்லிபுத்தூர்,
விருதுநகர்.



# ஏழு தானியங்கள்

எனக்குப் பிடித்த பாடல்

திங்கள் கிழமை வருது
தினை சாப்பிட்டுப் பாரு!
செவ்வாய்க் கிழமை வருது
சோளம் சாப்பிட்டுப் பாரு!
புதன் கிழமை வருது
பயறு சாப்பிட்டுப் பாரு!
வியாழக் கிழமை வருது
வரகு சாப்பிட்டுப் பாரு!
வெள்ளிக் கிழமை வருது
வாலி சாப்பிட்டுப் பாரு!
சனிக் கிழமை வருது
சாமை சாப்பிட்டுப் பாரு!
ஞாயிற்றுக் கிழமை வருது
கம்பு சாப்பிட்டு ஓய்வு எடு!



பி. தீபிகா,
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முழையூர், தஞ்சாவூர்.



# விடுகதைகள்



1. இத்தனூண்டு சிட்டுக்குருவிக்கு ஏழு முழம் சித்தாடை. **அது என்ன?**
2. கண்ணீர் விட்டுக் கதை சொல்வான், கதையால் கண்ணீரையும் மாற்றி விடுவான். **அவர் யார்?**
3. யானை ஏறாத மலையிலே ஆடு ஏறாத மலையிலே ஆயிரம் பூ பூத்திருக்கு. **அது என்ன?**



பி. வெற்றிச்செல்வன்,
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பிராமணம்பட்டி,
திருப்பத்தூர்,
சிவகங்கை.



விடைகள்: 1. வெங்காயம். 2. பேனா. 3. விண்மீன்.



# விடுகதைகள்

1. கடல் இருக்கு, நதி இருக்கு, தண்ணீர் இருக்காது. நாடு இருக்கு, ஊர் இருக்கு, வீடு இருக்காது.

**அது என்ன?**

3. வாரி வாரி வழங்குவான். வெளிச்சத்தை வாங்கத்தான் ஆள் இல்லை.
4. அமைதியான பையன். அடிக்காமலே அழுவான்.

**அவன் யார்?**

விடைகள்:
1. உலக வரைபடம்.
2. மின்னல்.
3. ஐஸ்கட்டி



ஜெ. வர்ஷினி,
8ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
விருபாட்சிபுரம்,
வேலூர்.


1. கோணக் கோண
புளியங்காய், சேர நாட்டு
வெங்காயம், எங்கள் நாட்டில்
இருந்து உங்க நாட்டுக்கு
வருது.

2. ஓடும் ஓடும் சங்கிலி,
உருண்டு ஓடும் சங்கிலி,
பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்து ஓடும் சங்கிலி.

**அது என்ன?**



விடைகள்:
1. பாதை.
2. தண்ணீர்



நா. நிர்மலா,
7ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி, கு.வலையபட்டி,
வையம்பட்டி, திருச்சி.

# பறவை ஓசை




ஆலமரத்து மேலே
அழகான கிளையிலே
ஆலம்பழம் தின்ன
கிளி ஒன்னு
கீச்சு கீச்சுன்னு
சொல்லுது!

புளிய மரத்து மேலே
பூங்குயில் ஒன்னு
புளியம்பழம் தின்ன
குக் கூன்னு கூவுது!

மாமரத்து மேலே
மயில் ஒன்னு
வா வான்னு
ஆடி ஆடி அழைக்குது!





பா. கிஷாலினி,
9ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருநாகேஸ்வரம்,
தஞ்சாவூர்.



குழந்தைகள் தினச் சிறப்பிதழ்

# எங்கள் ஊர்
## கணபதி சமுத்திரம்



எங்கள் ஊர் கணபதி சமுத்திரம், தென்மாவட்டங்களில் ஒன்றான தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம் கொட்டாரக்குறிச்சி ஊராட்சியில் உள்ளது. எங்கள் ஊருக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமைகள் உள்ளன.

**கொற்கைத் துறைமுகம்**

பழங்காலப் பாண்டிய மன்னர்களின் துறைமுகமாக விளங்கிய கொற்கை, 2000 ஆண்டுகளுக்கு முன்பு துறைமுகமாக இருந்தது. 1968ஆம் ... அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பண்டைய கால நாகரிகத்திற்குச் சான்றாக விளங்கும் பல்வேறு பொருள்கள் இங்கே கிடைத்துள்ளன. நம் தமிழர் வரலாற்றுப் பெருமைக்கு இங்கிருந்து சான்றுகள் கிடைத்து வருகின்றன. அதேபோலப் பழமையான கோவில்களும் எங்கள் ஊருக்கு அருகே உள்ளன.

**தாமிரபரணி ஆறு**

வற்றாத ஜீவநதியான தாமிரபரணி கடலில் கலக்கும் இடம் ஆத்தூர். இது எங்கள் ஊரில் இருந்து சிறிது தொலைவில் உள்ளது. தாமிரபரணி நதியில் இருந்து வாய்க்காலுக்கு வரும் நீர் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்குத் துணை நிற்கிறது.


**விவசாயமும் செங்கல் சூளையும்**

எங்கள் ஊர் மக்களின் முக்கியமான தொழில் விவசாயம். பயிர்கள் செழித்து வளர்ந்திருப்பதைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். எங்கள் பகுதி மண் வளமான மண்ணைப் போல வலிமையான மண்ணும்கூட. அதனால்தான் இங்கு செங்கல் சூளைகள் பல உள்ளன. வலிமையான செங்கற்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இது எங்கள் பகுதி மக்களின் முக்கியமான தொழிலாகவும் விளங்குகிறது.



**இயற்கையின் அழகு**

ஊரைச் சுற்றி இருக்கும் குளம், வாய்க்கால், ஆறு, கோவில்கள் என இயற்கையின் கொடையால் சூழப்பட்ட கிராமம்தான் எங்கள் கணபதி சமுத்திரம். இந்த வரலாற்று பூமியில் கால் பதிக்க நீங்களும் வாருங்கள்.





இ. பால ஜோதி,
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கணபதி சமுத்திரம்,
திருவைகுண்டம் ஒன்றியம்
தூத்துக்குடி.

# கோழியம்மா



கோழியம்மா கோழியம்மா

கோழியம்மா கோழியம்மா
கொக்கரக்கோ கோழியம்மா

சிவப்பு நிறக் கோழியம்மா
பழுப்பு நிறக் கோழியம்மா
கருப்பு நிறக் கோழியம்மா
புழுவும் சோறும் தருகிறேன்
ஓடி வா கோழியம்மா

சொன்ன பேச்சைக் கேட்கும்
அன்பான கோழியம்மா - அது
அழகான கோழியம்மா
எனக்கு சத்து தேவை கோழியம்மா
ஒரு முட்டை கொடு கோழியம்மா!



ரா. அனுஸ்ரீ,
8ஆம் வகுப்பு,
அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளி,
மோகனூர்,
நாமக்கல்.

# விடுகதைகள்



1. நீரில் கொண்டாட்டம், நிலத்தில் திண்டாட்டம். **அது என்ன?**
2. இரவெல்லாம் பூக்காடு, பகலெல்லாம் வெறுங்காடு. **அது என்ன?**
3. அண்ணன் தம்பி இரண்டு பேர் அவர்களைச் சுற்றி பன்னிரண்டு பேர். **அது என்ன?**


விடை: 1. மீன், 2. வானம், 3. கடிகாரம்.



அ. கீதாபத்மலோசினி,
9ஆம் வகுப்பு,
எஸ்.எஸ். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
இராஜபாளையம்,
விருதுநகர்.




# இந்த இதழ்கள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமா?




இந்த QR- Code ஐ ஸ்கேன் செய்து உடனே சந்தாதாரர் ஆகுங்கள்


உங்களுக்குப் பிடித்த **தேன்சிட்டு, ஊஞ்சல்** இதழ்கள்
உங்கள் வீடுகளுக்கு நேரடியாக வர வேண்டுமா?

Then Chittu Fortnightly Registered with RNI No: TNTAM/2022/82345.
Postal Registration No: TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No. TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 01-05 NOVEMBER 2024 Posted at Egmore, RMS/ Patrika Channel
இதழ் 47

குழந்தைகள் தினச் சிறப்பிதழ்

## இந்த இதழை அலங்கரித்த

# மாணவப் படைப்பாளிகள்!



உங்களுக்கு தேன்சிட்டு இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்

முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு,
8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர்
அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: **C. Amuthavalli,** Printer: **B. Rajkumar,** Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.